3. அரசின் தீர்மானம்.

1973-ஆம் ஆண்டு அரசியலமைப்பு (32-வது திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களை உறுதிப்படுத்துதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு, 1973-ஆம் ஆண்டு, அரசியலமைப்பு (32-வது திருத்த) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ் வருபவையுமான திருத்தங்களை, இம்மன்றம் இசைவுடன் உறுதிப்படுத்துகிறது"
என்று முன்மொழிகிறேன்.

1973-ஆம் ஆண்டு அரசியல்மைப்பு (முப்பத்திரண்டாவது திருத்தச்) சட்ட வரைவு, ஆந்திரப் பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு அரசுப் பணிகளிலும், கல்வியிலும், சம வாய்ப்புகளும் வசதிகளும் செய்து கொடுப்பதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 371-வது பிரிவைத் திருத்தவும், 371 டி, 371 இ ஆகிய புதிய பிரிவுகளைச் சேர்த்துக் கொள்ளவும் விழைகிறது. இத்திருத்தச்சட்ட வரைவு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 368-ஆவது பிரிவைச் சேர்ந்த (2) ஆவது பகுதியின் வரம்பு நிபந்தனையின் கீழ் மாநிலச் சட்ட மன்றத்தின் இசைவைப் பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

1956 ஆம் ஆண்டில், ஆந்திரப் பிரதேச மாநிலம் ஏற்படுத்தப்பட்டபோது, தெலிங்கானா பகுதியின் வளர்ச்சி குறித்தும், மற்றும் அப்பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கான வேலை வாய்ப்புகள், கல்வி வசதிகள் ஆகியவை குறித்தும் சில பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யக் கருதப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தில் 371 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) பகுதியின் விதித்துறைகள், இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் சிலவற்றுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவையாகும். தெலிங்கானா பகுதி வாழ் மக்களுக்கு, ஏனையவற்றுடன், வேலை வாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக, 1957-ஆம் ஆண்டு அரசுப் பணிகள் (குடியிருப்பு விதி) சட்டம் நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டது. தலைமை உயர்நீதி மன்றம், தெலிங்கானா பகுதியில் அளிக்கக் கருதப்பட்டுள்ள சில பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பொறுத்த மட்டில், மேற்படி சட்டத்தில் சில விதித்துறைகள் அரசியலமைப்புக்குப் புறம்பானவை என்று தீர்ப்பளித்தது. பல்வேறு வகையான காரணங்களால் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செயல்படுத்தியதால் சில சமயங்களில் தெலிங்கானா பகுதிகளிலும், சில சமயங்களில்

ஆந்திரப் பிரதேசத்தின் பிற பகுதிகளிலும் ஓரளவிற்கு அதிருப்தியைத் தோற்றுவித்தது. இப்பிரச்சினைகளைத் தீர்க்க அவ்வப்போது சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அண்மையில் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த தலைவர்கள் பலர் அதிருப்தி ஏற்பட்டதற்கான காரணங்களைப் பரிசீலிப்பதற்கு ஒருமித்த முயற்சி எடுத்துக்கொண்டு ஆந்திரப் பிரதேச மக்களிடையே முழு அளவில் கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்தும் பொருட்டு இப்பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகளைக் கண்டனர். இம்மாநிலத்தில் உள்ள பின் தங்கிய பகுதிகளில் முறையான வளர்ச்சிக்கான ஒரு சீரான அணுகுமுறையைக் குறிப்பிடுகின்ற பொதுவாக ஆறு அம்சத் திட்டம் என்று சொல்லப்படுகிற சில ஏற்பாடுகளை அவர்கள் 1973-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21 ஆம் நாளன்று தெரிவித்தனர். இதனால் மொத்தத்தில் மாநிலத்தில் சீரான வளர்ச்சிக்கும், கல்வி, வேலை வாய்ப்பு, மற்றும் அரசுப் பணிகளில் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு சம வாய்ப்புக்கள் வழங்குவதற்கும் வழி ஏற்படும். இத்திட்டத்திற்கு ஆந்திரப் பிரதேசத்தில் பரவலான ஆதரவு கிடைத்தது. ஆந்திரப் பிரதேச அரசு இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டது.

ஆந்திரப் பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு, கல்வி நிறுவனங்களிலும், அரசுப் பணிகளிலும், சேர்வதில் சம வாய்ப்புக்கள் அளிப்பதற்குப் பொருந்துகிற வகையில் ஆறு அம்சத் திட்டத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கவும், அரசுப் பணிகள் தொடர்பான சில தகராறுகள், குறைகள் ஆகியவற்றைக் கவனிப்பதற்கான அதிகார வரம்புடன் கூடிய நிர்வாக நடுவர் மன்றம் ஒன்றை அமைக்கவும் தேவையான அரசியலமைப்புப்படிக்கான அதிகாரங்கள் வழங்குவதற்காக இச்சட்ட வரைவு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் இச்சட்ட வரைவு அம்மாநிலத்தில் மத்தியப் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான சட்டமியற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கவும் விழைகிறது. மற்றும் இதில் முன்னர் செய்யப்பட்ட சில நியமனங்களைச் செல்லுபடியாக்குதற்கான விதித்துறை உட்பட சில இடை நிகழ்வான, தொடர்பான விதித்துறைகளும் அடங்கியுள்ளன. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 371 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) பகுதியின் கீழ் அமைக்கப்பட்ட வட்டாரக் குழுவைக் கலைத்துவிடுவதற்கு இந்த ஆறு அம்சத் திட்டம் வகை செய்வதால் மேற்படி பகுதியை ரத்து செய்யவும் இச்சட்ட வரைவு வகை செய்கிறது. இந்தத் தீர்மானத்தை ஏற்க வேண்டுமென்று இம்மேலவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு 1973-ஆம் ஆண்டு, அரசியலமைப்பு (32-வது திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ் வருபவையுமான திருத்தங்களை, இம்மன்றம் இசைவுடன் உறுதிப்படுத்துகிறது."

*திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் அரசியல் நிர்ணயச் சட்டம் நிறைவேறிய பின், 33-வது திருத்த மசோதாவாக பிரேரேபிக்கப்பட்டு, 32-வது சட்டமாக நிறைவேற்றப்பட்டு, அது நம்முடைய அங்கீகாரத்திற்கு, மாநில சட்டசபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

நம்முடன் கூடவே இருந்து, நம்மை விட்டுப் பிரிந்து 'ஆந்திர மாநிலம்' என்று தனி மாநிலம் அமைத்துக் கொண்டு சென்ற ஆந்திர சகோதரர்களின் மாநிலத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற நிகழ்ச்சிகள், நம்மையெல்லாம் மிகுந்த குழப்பத்தில் ஆழ்த்தின. அண்டை மாநிலம் இவ்வளவு மோசமாகப் போய்க் கொண்டிருக்கிறதே, மக்களுக்கு நல்வாழ்வு அற்றுப் போய்க்கொண்டிருக்கின்ற நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதே என்றெல்லாம் நாம் கவலையோடு இருந்து வந்த சூழ்நிலை மாறி, இப்பொழுது வந்துள்ள அரசியல் நிர்ணயச் சட்டத் திருத்த மசோதாவின் மூலம், அமைதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த மாநிலம் இரண்டாகவோ அல்லது மூன்றாகவோ துண்டாடப்பட்டு விடுமோ என்று அஞ்சிய நிலை மாறி, மீண்டும் அதை ஒரே மாநிலமாக இயங்க வைத்த பெருமை இந்தச் சட்டத்திற்கு உண்டு.

பொதுவாக ஒரு மாநிலத்தில் ஒரு பக்கத்தில் வாழ்கின்றவர்களுக்கு ஒரு விதமான உரிமைகளும் இன்னொரு பக்கத்தில் வாழ்கின்றவர்களுக்கு வேறு விதமான உரிமைகளும் இருந்துகொண்டு, இரண்டு விதமான பிரஜைகளாக இதுவரையில் வாழ்ந்து வந்தார்கள்.

(பிற்பகல் 4-30)

1918-ஆம் வருடத்தில், 55 வருடங்களுக்கு முன்னால், நிஜாம் சில விதிகளைச் செய்திருந்தார். அதற்கு முல்கி ரூல்ஸ் என்று பெயர். அதன்படி தெலிங்கானாவில் பிறந்து வளர்ந்து, அந்த ஊர் குடியுரிமை பெற்றவர்கள் தான் உத்தியோகத்திற்கு வரமுடியும் என்றிருந்தது. நியாயமாக நிஜாமின் அரசும்

இந்திய நாட்டின் ஒரு பகுதியாக ஆன பிறகு, இந்த முல்கி ரூல்ஸ நாளுகப் போயிருக்க வேண்டும். ஆனுல் இந்திய உயர்நீதி மன்றத்தில் ஒரு கேஸ் வந்து, அந்த மன்றம் முல்கி ரூல்ஸ் இன்னும் உயிரோடு இருக்க வேண்டியதுதான், அதன்படி தெலிங்காளு பகுதியில் பிறந்தவர்கள் தான் அங்கே உத்தியோகத்தில் இருக்க முடியும் என்று தீர்ப்புச் சொல்லியது. அதன் காரணமாக ஏற்பட்ட எழுச்சி அந்த மாநிலம் பூராவும் பெரிய கிளர்ச்சியை உண்டுபண்ணி, சகோதரர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். நிர்வாகம் ஸ்தம்பிதமான நிலைமைக்கு வந்தது. சட்டசபையை நிறுத்தி வைத்து அரசாங்கத்தைக் கலைத்து, பிரசிடெண்டு ஆட்சி ஏற்படும் நிலைமை வந்தது. அதையெல்லாம் மாற்ற சற்றுக் காலதாமத மானுலும், இறுதியாக நாட்டின் அமைதியும், ஒருமைப்பாடும் குலையாமல் நிலைநிறுத்தப்பட்டது மகிழ்ச்சியான காரியமாகும். இந்தச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலமாக பல நல்ல முடிவுகளை அந்த மாநில மக்களுக்கு அளித்திருந்தாலும், இதிலும் பழைய விஷ வித்தில் ஒரு பகுதி இன்னும் போகாமல் இருக்கின்றதே என்று என்னைப் போன்றவர்கள் வருந்த வேண்டி யிருக்கிறது. ஏனென்றுல் அந்தந்த ஜில்லாவைச் சேர்ந்தவர்களைத் தான் அந்தந்த ஜில்லாவில் உள்ள பதவிகளுக்கு நியமிக்க வேண்டும் என்ற ஷரத்து அதில் இருக்கிறது. இந்த ஷரத்து அந்த மாநில மக்களைத் திருப்தி செய்து விட்டது என்றுலும், இந்தியா பூராவும் ஒரு நாடு, எல்லாம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கக்கூடிய நாட்டின் நலனைக் கருதுபவர்களுக்குக் கொஞ்சம் வருத்தமாகத்தான் இருக்கிறது. அந்த ஜில்லாவில் பிறந்தவர்களைத்தான் அந்த ஜில்லாவுக்கு ரெக்ரூட்மெண்ட் செய்ய வேண்டுமென்பது 6 பாயின்ட் பார்முலாவில் அடங்கியிருக்கிறது. அது நமக்கு அவ்வளவு மகிழ்ச்சி தரக்கூடிய விஷயமல்ல. இருந்தாலும் அது அந்த மாநிலத்தில் இருப்பவர்களுக்குத் திருப்தியளித்து, அமைதியை உண்டுபண்ணிய தற்காக, அவர்கள் விரும்பி வரவேற்கிறுர்கள். ஆகவே நாமும் வரவேற்கிருேம். ஆனுல் நாட்டின் பொதுநன்மையை எண்ணிப் பார்ப்பவர்களுக்கு இந்த ஒரு ஷரத்து ஆட்சேபணைக்குரியது தான். இருப்பினும் இது நல்ல நிலைமையை ஏற்படுத்த செய்யப்பட்ட சட்டம் என்பதால் நாமும் வரவேற்கிருேம். இதில் எவ்வித ஆட்சேபணையும் செய்வதற்கில்லை. ஆகவே எங்கள் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன் என்று தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை:

"பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு, 1973-ஆம் ஆண்டு, அரசியலமைப்பு (32-வது திருத்த) சட்ட முன்வடிவினுல் செய்யக்

கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ் வருபவையுமான திருத்தங்களை, இம்மன்றம் இசைவுடன் உறுதிப்படுத்துகிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) 1974-ஆம் ஆண்டு, பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1974.)

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே,

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1974-ஆம் ஆண்டு, பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு @ (பேரவைச் சட்ட முன்வடிவு எண் 7/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

1883-ஆம் ஆண்டு நில மேம்பாட்டுக் கடன்கள் சட்டத்தின்கீழ் அல்லது 1884-ஆம் ஆண்டு விவசாயிகள் கடன் சட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடன்கள் சம்பந்தமாக, கடன்கள் வழங்கும் ஆணைகளின் நகல்கள் அல்லது இயங்காச் சொத்துக்களைக் கொறுவை வைப்பது குறித்து பத்திரங்களின் நகல்கள், 1908-ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/1908) 89-வது பிரிவின் (1), (3) உட்பிரிவுகளின் கீழ், சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அதிகாரியின் 1-ம் எண் புத்தகத்தில் தாக்கல் செய்யப்படுகின்றன. நகல்கள் வரப்பெற்றதும், 1908-ஆம் ஆண்டு 16-வது மத்தியச் சட்டத்தின் 54, 55-வது பிரிவுகளின்படி குறியீடுகளில் பதிவுகள் செய்யப்படுகின்றன. நில மேம்பாட்டுச் சட்டத்தின்கீழ் அல்லது விவசாயிகள் கடன் சட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடன்கள் கொடுத்துத் தீர்க்கப்பட்ட தகவல்கள் பத்திரப் பதிவுத் துறையில் பெறப்படுவதில்லை. எனவே, 1908-ஆம் ஆண்டு 16-ஆவது மத்தியச் சட்டத்தின் 54, 55-ஆவது பிரிவுகளின்படி வைத்து வரப்படும் குறியீடுகளில் அந்தத் தகவல்கள் இடம் பெறுவதில்லை. இதன் விளைவாக, பத்திரப் பதிவு அதிகாரிகள் அளிக்கும் வில்லங்கச் சான்றுகளிலும் இவை இடம் பெறுவதில்லை. மேற்சொன்ன 1-ஆம் எண் புத்தகத்தில், கடன் தீர்க்கப்பட்டது பற்றிய தகவல் தாக்கல் செய்யப்படுவதற்கு 1908-ஆம் ஆண்டு பத்திரப்பதிவுச் சட்டத்தில் குறிப்பாக விதித்துறை எதுவுமில்லை என்பதுதான் இதற்குக் காரணமாகும். கடன் தீர்க்கப்பட்டது குறித்து பதிவு, 1908-ஆம் ஆண்டுச் சட்டத்தின் 54, 55-ஆவது பிரிவுகளின்படி வைத்து வரப்படும் குறியீடுகளில்

@ 41-ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.